[1981 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலிலே ஒரு வார்த்தையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூர்ந்து கவனித்திருந்தால் நலமாக இருந்திருக்கும். ''ஏறக்குறைய மற்றெல்லாப் பகுதிகளிலும் என்றால் ஒன்றிரண்டு இடங்கள் விட்டுப்போய் இருக்கலாம் என்பதுதான் அர்த்தம். அப்படிப்பட்ட இடங்களில் இதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திருப்பரங்குன்றம் பேரூராட்சிப் பகுதியில் குடிநீர் வசதியினை விஸ்தரித்தல்.

*வினா எண். 584—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் பேரூராட்சியில் குழாய் மூலம் குடிநீர் வசதி விஸ்தரிப்பு செய்து கொடுக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: ஏற்கெனவே, குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பொழுது இதை விஸ்தரிப்புச் செய்து கொடுக்கும் உத்தேசம் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குழாய்களில் தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சமீபத்தில் நடந்த விவசாயிகள் போராட்டத்தில் விஷமிகள் குழாய்களை உடைத்துவிட்டார்கள்; அசுத்தத்தைக் கலந்து விட்டார்கள். அவைகள் ரிப்பேர் பார்க்காமல் இருக்கின்றன. இதன் காரணமாக திருப்பரங்குன்றம் பகுதியில் சரியான முறையில் தண்ணீர் வருவதில்லை. உடனடியாக ரிப்பேர் பார்த்து தண்ணீர் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருப்பரங்குன்றம் பேரூராட்சியில் திருவிழாக் காலங்களில் மக்கள் குடிதண்ணீருக்காக மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், பக்கத்திலே, மாடக்குளம் கண்மாய் இருக்கிறது. அங்கே மொட்டையடித்துவிட்டு அந்த அசுத்தத் தண்ணீரிலேயே குளிக்கிறார்கள், இதனால் வியாதிகள் வருகின்றன. ஆகவே, அந்

தத் தண்ணீரிலே குளிக்காமல் இருப்பதற்கு அரசு பிரச்சாரம் செய்யுமா? திருவிழா காலங்களிலே மக்களுக்குத் தண்ணீர் தடங்கலின்றிக் கிடைப்பதற்கு ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அந்த ஊர் சுற்றுலா ஸ்தலம் என்ற காரணத்தால் அங்குள்ள மக்களுக்கு ஒருவருக்கு 90 லிட்டர் குடிநீர் வழங்கவும், சுற்றுலாப் பயணிகளுக்கு நபர் ஒருவருக்கு ஒரு நாளுக்கு 25 லிட்டர் தண்ணீரும் வழங்கும் வகையில் அந்தத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்ற நிலைமைகள் ஏற்படுவதற்கு நியாயமில்லை.

தமிழ்நாட்டில் ஓடும் நதிகளில் வெள்ளக்கட்டுப்பாட்டிற்கானப் பணிகள்.

*வினா எண். 585—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை உட்பட தமிழ்நாட்டில் ஓடும் நதிகளில் வெள்ளக்கட்டுப்பாட்டிற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு தமிழக அரசு விரிவான முறையில் திட்டமொன்றை தயாரித்து வருவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது?

(இ) இதற்கு மத்திய அரசு உதவி உண்டா?

(ஈ) ஆம் எனில் எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) முதல் (ஈ) வரை: சபையின் முன் ஓர் * விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையின் அடிப்படையிலே பார்க்கிறபோது செம்பரம்பாக்கத்தினுடைய ஏரியில் வெள்ளத் தடுப்பு செய்வதற்கு கரையைப் பலப்படுத்துவதற்கு 128.42 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அந்த வேலைகள் துரிதமாக நடைபெறவில்லையே, அந்த வேலைகள் துரிதப்படுத்தப்படுமா என்பதைத்

---

*388—393ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.